Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    PEOPLES DAILY    மக்கள் தினசரி

நாதம்: 02    திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 13    ( 29 - 08 - 1991 )    வியாழக்கிழமை    ஓசை: 192

## கடந்த கால வினாத்தாள்கள் தமிழில் வெளிவரவில்லை

(கொழும்பு)

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தில் வெளியிடப்பட்ட கடந்தகால பரீட்சை வினாத்தாள்கள் தமிழில் அச்சிடப்படவில்லை. இதுபற்றித் தெரியவருவதாவது, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் கடந்தகாலப் பரீட்சை வினாத்தாள்களை விற்பனை செய்வது என அறிவித்தது. இதன்படி ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சைக்குரிய வினாக்கள் அடங்கிய புத்தகம் தமிழ், சிங்கள மொழிகளில் மொழி, கணிதம் ஆகிய பாடங்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. ஆனால் க.பொ.த. (சா.த), க.பொ.த (உ.த) பரீட்சைகளுக்குரிய கடந்த (4 ஆம் பக்கம் பார்க்க)

# சீனத் தயாரிப்பு ஜெட் விமானங்கள் தென்னிலங்கையில் போர் ஒத்திகை

## வடக்கில் விரைவில் பயன்படுத்தப்படும்

(கொழும்பு)

சீனாவிடம் இருந்து சிறிலங்கா கொள்வனவு செய்த புதிய ரக போர் விமானங்களின் ஒரு தொகுதி கொழும்பு வந்து சேர்ந்துள்ளன. தற்பொழுது தென்னிலங்கையில் முன்னோடிப் பயிற்சியில் ஈடுபடும இப் போர் விமானங்கள் மிக அண்மையில் வடக்கு கிழக்கு பகுதியில் நடைபெறும் இராணுவ நடவடிக்கையில் பயன்படுததப்படவுள்ளன. இவ்வாறு சிறிலங்கா இராணுவ அதிகாரி ஒருவர் குறிப்பிட்டதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

இது தொடர்பாக இராணுவ அதிகாரி மேலும் தகவல் வெளியிடுகையில், சீனாவில் இருந்து கொள்வனவு செய்த எவ் – 85 ரகப் போர்விமானங்கள் மூன்று தற்பொழுது கொழும்பு வந்து சேர்ந்துள்ளதாகத் தெரிவித்தார்.

இவ் விமானங்கள் தற்பொழுது தென்னிலங்கைப் பகுதியில் பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும், இவை விரைவில் வடக்கு-கிழக்குப் போரில் பயன்படுத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்விமானங்கள் சிறிலங்கா விமானப்படையிடம் தற்பொழுதுள்ள குண்டு வீச்சு விமானங்களான மாச்செட்டி விமானங்களைவிட வேகமாக பறக்கக் கூடியவையாகவும், அதிக அளவு எடையுள்ள குண்டுகளைத் தாங்கிச்செல்லக்கூடிய தொழில் நுட்பம் உடையவை எனவும் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், இந்த ரகப் போர்விமானங்களில் மேலும் மூன்று விமானங்கள் மிக விரைவில் கொழும்புக்கு வரவுள்ளதாகவும் தெரிவித்தார். அத்தோடு ஒரு தொகுதி பீரங்கிகளும் கொழும்பை வந்தடைந்துள்ள

## சோவியத் அமைச்சரவை கலைப்பு

(மொஸ்கோ)

ஜனாதிபதி கொர்பசேவ் தனது அமைச்சரவையில் தனக்கு நம்பிக்கையில்லை என்று தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து சோவியத் அமைச்சரவையைப் பாராளுமன்றம் கலைத்துள்ளது.

## ஹோர்லிக்சிற்குள் தங்கம் கடத்தல்

(கொழும்பு)

மத்திய கிழக்கில் இருந்து பெரிய ஹோர்லிக்ஸ் போத்தலில் ஒளித்து 500 கிராம் எடையுள்ள 2 லட்சம் ரூபா பெறுமதியான நகையைக் கடத்தி வந்தவர் கட்டுநாயக்காவில் அதிகாரிகளிடம் சிக்கியுள்ளார். இவருக்கு 6 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

## புதிய திட்டமிடல் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திற்கு புதிய திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளார். சர்வதேசவிவகாரத்திலும் சமூகத் திட்டமிடலிலும் பட்டம் பெற்ற திரு. வி. செ. சுவாமிநாதன் இம்மாதம்

## சீமெந்துக் கூட்டுத்தாபனம் இவ்வருடத்தில் கம்பனியாகும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தை இவ்வாண்டு இறுதிக்குள் கம்பனியாக மாற்றுவதற்கு விஞ்ஞான. கைத்தொழில் அமைச்சு தீர்மானித்துள்ளது. இதனால் காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபன ஆலையில் கடமையாற்றிய ஆயிரக்கணக்கான ஊழியர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது.

இவ்வாலையில் வேலை செய்த ஊழியர்களுக்கு இதுவரை காலமும் தொடர்ந்து ஊதியம் வழங்கப்பட்டுவருகின்றது. மேற்படி தீர்மானத்தின்படி கம்பனியாக மாற்றப்படும் பட்சத்தில் தொடர்ந்தும் இந்த ஊழியர்களுக்கு அமையப்போகும் கம்பனி இயங்க முடியாத ஒரு ஆலையின் (4ஆம் பக்கம் பார்க்க)

## லங்கா சீமெந்து நிறுவனம் வர்த்தக முயற்சிகள்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை லங்கா சீமெந்து நிறுவனம் புதியவர்த்தக முயற்சிகளை மேற்கொள்வதற்கு முடிவு செய்திருக்கின்றது.

இந் நிறுவனத்தின் இயந்திரத் தொகுதி சிறிலங்கா இராணுவத்தினரின் பிடிக்குள் சிக்குண்டிருப்பதால் இந் நிறுவ... றாக இழந்து பலமாதங்களாகி விட்டது. இதனால் இங்கு (4ஆம் பக்கம் பார்க்க)

## 6 பெண்கள் வவுனியாவில் இராணுவத்தால் மானபங்கம்

(வவுனியா)

வவுனியாவில் ஆறு இளம் ... ணுவத்தினரால் மானபங்கப் படுத்தப்பட்டனர்.

இப் போர் விமானங்கள் மிக அண்மையில் வடக்கு கிழக்கு பகுதியில் நடைபெறும் இராணுவ நடவடிக்கையில் பயன்படுததப்படவுள்ளன. இவ்வாறு சிறிலங்கா இராணுவ அதிகாரி ஒருவர் குறிப்பிட்டதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

இது தொடர்பாக இராணுவ அதிகாரி மேலும் தகவல் வெளியிடுகையில், சீனாவில் இருந்து கொள்வனவு செய்த எவ் – 85 ரகப் போர்விமானங்கள் மூன்று தற்பொழுது கொழும்பு வந்து சேர்ந்துள்ளதாகத் தெரிவித்தார்.

இவ் விமானங்கள் தற்பொழுது தென்னிலங்கைப் பகுதியில் பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும், இவை விரைவில் வடக்கு-கிழக்குப் போரில் பயன்படுத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்விமானங்கள் சிறிலங்கா விமானப்படையிடம் தற்பொழுதுள்ள குண்டு வீச்சு விமானங்களான மாச்செட்டி விமானங்களைவிட வேகமாக பறக்கக் கூடியவையாகவும், அதிக அளவு எடையுள்ள குண்டுகளைத் தாங்கிச்செல்லக்கூடிய தொழில் நுட்பம் உடையவை எனவும் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், இந்த ரகப் போர்விமானங்களில் மேலும் மூன்று விமானங்கள் மிக விரைவில் கொழும்புக்கு வரவுள்ளதாகவும் தெரிவித்தார். அத்தோடு ஒரு தொகுதி பீரங்கிகளும் கொழும்பை வந்தடைந்துள்ளதாகத் தெரிவித்தார்.

## கடற்படைப் பாவனைக்கு கொழும்பில்தயாரித்தகப்பல்

(கொழும்பு)

நீர்மட்டம் கரையோரங்களில் நின்று சரக்குகளை ஏற்றி இறக்கக்கூடிய வசதியிலான கப்பல் ஒன்றை கொழும்பு டொக்யாட் நிறுவனம் தயாரித்து நேற்று சிறிலங்கா கடற்படையிடம் ஒப்படைத்தது.

ஆளணி, வாகனங்கள் உணவுப் பொருள்கள், மருந்து வகைகள் ஆகியவற்றை நெருக்கடி நேரங்களில் தாம்கொண்டு செல்ல இந்த மரக்கலம் உதவியாக இருக்கும் என்று சிறிலங்கா கடற்படை கூறியுள்ளது.

இந்தக் கலம் 5 கோடியே 85 லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

## இல. தமிழர் மேலும் ஒருவர் கைது

(சென்னை)

தமிழகத்தில் இருந்து வரும் 'துக்ளக்' சஞ்சிகையின் காரியாலயம் அமைந்துள்ள ஆள்வார்ப் பேட்டைக்கு அருகில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடிய இளை

(4ஆம் பக்கம் பார்க்க)

பெறுமதியான நகைகளை கடத்தி வந்தவர் கட்டுநாயக்காவில் அதிகாரிகளிடம் சிக்கியுள்ளார். இவருக்கு 6 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

## புதிய திட்டமிடல் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திற்கு புதிய திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளார். சர்வதேசவிவகாரத்திலும் சமூகத் திட்டமிடலிலும் பட்டம் பெற்ற திரு. வி. செ. சுவாமிநாதன் இம்மாதம் முதல் மேற்படி பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார் (க)

## சிற்பம் பொது பரீட்சை முடிவு திகதி செப். 24

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் நடைபெறவுள்ள சித்திரம், சிற்பம், ஓவியம் ஆகிய துறைகளுக்குரிய தரம் IV, V பொதுப் பரீட்சைகளுக்கான விண்ணப்பமுடிவு திகதி செப்ரெம்பர் மாதம் 24ஆம் திகதி என

(4ஆம் பக்கம் பார்க்க)

ஸ்தாபனத்தை இவ்வாண்டு இறுதிக்குள் கம்பனியாக மாற்றுவதற்கு விஞ்ஞான, கைத்தொழில் அமைச்சு முடிவு செய்துள்ளது. காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபன ஆலையில் கடமையாற்றிய ஆயிரக்கணக்கான ஊழியர்கள் இவ்வாலையில் வேலை செய்த ஊழியர்களுக்கு இது வரை காலமும் தொடர்ந்து ஊதியம் வழங்கப்பட்டுவருகின்றது. மேற்படி தீர்மானத்தின்படி கம்பனியாக மாற்றப்படும் பட்சத்தில் தொடர்ந்தும் இந்த ஊழியர்களுக்கு அமையப்போகும் கம்பனி இயங்க முடியாத ஒரு ஆலையின்

(4ஆம் பக்கம் பார்க்க)

## லங்கா சீமெந்து நிறுவனம் வர்த்தக முயற்சிகள்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை லங்கா சீமெந்து நிறுவனம் புதியவர்த்தக முயற்சிகளை மேற் கொள்வதற்கு முடிவு செய்திருக்கின்றது.

இந் நிறுவனத்தின் இயந்திரத் தொகுதி சிறிலங்கா இராணுவத்தினரின் பிடிக்குள் சிக்குண்டிருப்பதால் இந் நிறுவனம் தனது வருமானத்தைமுற்றாக இழந்து பலமாதங்களாகிவிட்டது. இதனால் இங்கு

(4ஆம் பக்கம் பார்க்க)

## 6 பெண்கள் வவுனியாவில் இராணுவத்தால் மானபங்கம்

(வவுனியா)

வவுனியாவில் ஆறு இளம் பெண்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் மானபங்கப் படுத்தப்பட்டனர்.

கடந்த 26 ஆம் திகதி இரவு சாந்தசோலைஎன்னும் இடத்தில் தங்கியிருந்த தமிழ்ப்பெண்களே மானபங்கப்படுத்தப்பட்டனர்.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது: வவுனியா கிராமப்புறங்களில் நிலவும் மண்ணெண்ணைத் தட்டுப்பாட்டை அடுத்துவவுனியா நகரிலிருந்து மண்எண்ணையைப் பெற்று சாந்தசோலை என்னும் பகுவரை வந்து நகரப்பகுதி மக்கள் வியாபாரத்தில் ஈடுபடுவது வழமை.

சம்பவதினம், குறிப்பிட்ட பெண்கள் மண்எண்ணையை விற்பனை செய்து விட்டு மறுநாட் காலை நகரப்பகுதி செல்லும் எண்ணத்துடன் தங்கியிருந்த சமயம், அன்றிரவு

(4ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் ஆதரவாளர் என 12 பேர் கர்நாடகாவில் கைது

(பெங்களூர்)

கர்நாடகாவில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்ற சந்தேகத்தில் பன்னிரெண்டு தமிழ்நாட்டவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஞாயிறறுக்கிழமை கைது செய்யப்பட்ட இவர்கள் விடுதலைப் புலிகளின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சகலருக்கும் நிவாரணம் வழங்கமுடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில்உள்ள இடம்பெயர்ந்தமக்கள் அனைவருக்கும் உலர் உணவு நிவாரணம் வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.

யாழ். செயலகத்தில் இடம் பெற்ற கலந்துரையாடலின் பின் மேற்படி முடிவு எடுக்கப்பட்டிருக்கின்றது. (க)

திருமலை மாவட்டத்தில்

# புலிகள் வழிமறித்துத் தாக்கியதில் 4 இராணுவம் பலி; ஆயுதங்கள் மீட்பு

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவ அணி ஒன்றின்மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர் சில ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன. விடுதலைப் புலிகள் தரப்பில் நால்வர் வீரமரணம் அடைந்தனர்.

நேற்றுக்காலை வேப்பங்குளம் முகாமிலிருந்து ஐம்பதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் வெளியேறி பத்தாம் கட்டை இராணுவ முகாமை நோக்கி ரோந்து சென்றனர்.

இந்த அணியை வழிமறித்து விடுதலைப் புலிகள் கடுந்தாக்குதலை மேற்கொண்டனர். சிலமணி நேரம் நடைபெற்ற மேற்படி மோதலில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். இவர்களிடமிருந்து,

★ ·.56-2 ரக துப்பாக்கிகள்-3

★ இவற்றுக்கான ரவைக்கூடுகள் - 9

★ இவற்றின் ரவைகள் –370

ஆகிய ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன

## திருமலையில் 4 புலிகள் வீர மரணம்

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் நேற்று சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில்

★ லெப். சிறிநாத் (மயில்வாகனம் திருச்செல்வம், செல்வநாயகபுரம், திருமலை)

★ 2 ஆம் லெப். பீற்றர் (ஆறுமுகம் பகவத்சிங், பன்குளம், திருமலை)

★ வீரவேங்கை சுதா (செபமாலை ஜெகதீஸ்வரன்,

(4ஆம் பக்கம் பார்க்க)

சுதந்திர நாடுகளாக

# குடியரசுகளை அங்கீகரித்த நாடுகள் மீது கண்டனம்

(மொஸ்கோ)

குடியரசுகளின் சுதந்திரத்தைச்சில நாடுகள் அவசர அவசரமாக அங்கீகரித்து வருவதை ஜனாதிபதிகொர்பசேவ் குறை கூறியுள்ளார்.

செய்தியாளரிடம் பேசிய கொர்பசேவ் மூன்று பால்டிக் குடியரசுகளான லித்துவேனியா, எஸ்தோனியா, லத்வியா ஆகியவற்றின் சுதந்திரத்தைச் சில நாடுகள் அங்கீகரித்து வரும் வேகத்தைக் கண்டித்திருப்பதோடு, அந்த பால்டிக் குடியரசுகளை அங்கீகரித்துள்ள அயல் நாட்டு அரசுகள், குடியரசுகள் இரண்டுமே அவசரப்பட்டுச் செயற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கே. ஜி. பி. தலைமைப் பீடம் கொர்பசேவால் கலைப்பு

(மொஸ்கோ)

சோவியத் ஜனாதிபதி கொர்பசேவ் கே ஜி-பி. அமைப்பின் தலைமைப் பீடத்தைக் கலைத்துள்ளார்.

தோல்வியில் முடிந்த திடீர் சதிப் புரட்சியில் கே. ஜி. பி. க்குச் சம்பந்தம் இருந்ததைத் தொடர்ந்தே அதன் தலை

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**ஆண்டு - 5**
**(புலமைப்பரிசில்)**

(மாணவர்களைப் பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமான பயிற்சிப் பரீட்சை) தமிழ், கணிதம் பாடங்களுக்குரிய மாதிரி வினாத்தாள்கள் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும். அவற்றிற்கு விடையளித்துத் தரும் பட்சத்தில் இலவசமாக விடைகளுடன் திருத்திக் கொடுக்கப்படும்) BONDபுத்தகநிறுவனம். 58A, ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்.
(B-9832)

**O/L 90, 91 வாராந்த பயிற்சி மதிப்பீடு**

விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களுக்குரிய பகுதி I+II வினாத்தாள்கள் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும், அதற்கு விடையளித்துத் தரும் பட்சத்தில் இலவசமாக விடையுடன் திருத்திக் கொடுக்கப்படும். BONDபுத்தக நிறுவனம். 58A, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.
(B-2984)

**தேவை**

வேப்பம் விதை, இலுப்பம் விதை தேவை. மில்க்வைற், யாழ்ப்பாணம். (B-3013)

## 45-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
01-01-1975
உதிர்வு
16-07-1991

**2-ம் லெப்டினன்ட் மௌலி**
**(தாமோதரம்பிள்ளை மணிவாசகன்)**

புகுந்து களமாட எனப் போனான்
எதிரிகளின் படையணியுள்
நுழைந்ததொரு புயலாக;
முன்னணிப் படையின் மூச்சாகப் போனான்
புறநானூற்று வீரத்தின் புதியதொரு பதிப்பாகப்
— போனான்

உடல் மீளவில்லைத் தான்
மௌலி என்னவானான்
உருவற்ற தியாகத்தின் ஒளிச்சுடரில்
ஒரு பொறியானான்
புலரும் ஒளிப் பொழுதின் துளியாக
அவன் வாழ்க!

கோணவளை லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
பெற்றோர், சகோதரர், உறவினர், நண்பர்கள்
(B/3020)

## 31ஆம் நினைவு அஞ்சலி

## வீர அஞ்சலி



**மேஜர் சேரன்**
**(சண்முகம் றோய் செழியன்)**
கொழும்பு

வீரஜனனம்
16-11-1969
வீரமரணம்
21-07-1991

கட்டைக்காட்டில்
சிங்கள மண்ணில் தோன்றிய வேங்கை
"தினேஷ்"சுடன் நிழலெனத் திரிந்தோன்
வெந்திடும் தமிழர் வேதனை தீர
விரும்பிய விடுதலை வீரன்
பொங்கிடும் கடலாய், புயலிடி மழையாய்
போர்க்களம் ஆடிய வேங்கை
செந்தமிழீழத் திசையெலாம் வீசும்
தென்றலே சேரனை பாடு



**மேஜர் லவன்**
**(துரைசிங்கம் ராஜ்சங்கர்)**
கொழும்பு

வீரஜனனம்
21-04-1968
வீரமரணம்
14-07-1991

கட்டைக்காட்டில்

## 45-ம் நாள் நினைவஞ்சலி







2ஆம்லெப்.
**தைரியம்**
(நடராசா ஆனந்தராசா - கொற்றாவத்தை பொலிகண்டி)
வீரஜனனம்: 07 . 01 . 1963
வீரமரணம்: 16 . 07 . 1991

வீரவேங்கை
**வேல்ராஜ்**
(அறுக்கஞ்சி - விஞ்சன் அமலதாஸ் பலாலி)
வீரஜனனம்: 05 . 09 . 1968
வீரமரணம்: 16 . 07 . 1991

தீவிர ஆதரவாளர்
**குயிலன்**
(இரத்தினம் வர்ணகுலசிங்கம்-ஊறணி, வல்வெட்டித்துறை)
வீரஜனனம்: 06 . 01 . 1963
வீரமரணம்: 16 . 07 . 1991

விடுதலைப் பாதையில் விரைந்திட்ட வேங்கைகள்
வித்தாகி வீழ்ந்தனர் வெடிவிபத்தொன்றில்
நொடி அது பொழுதினில் தொழில் நுட்ப வீரர்கள்
மூவரும் ஒன்றாகி இணைந்தனர் சாவினில்.

தைரியம் என்பான் தன்பெயர்க் கேற்றவன்
தனிப்பெரும் வீரனாய் திகழ்ந்தவன் வேல்ராஜ்
குயிலனோ வேங்கையர் மாபெரும் அணியில்
கொண்டனன் சேவையை நீண்ட பல காலம்.

அன்னை தமிழ்த்தாயே அவியம்மா நின்புதல்வர்
மின்னாது முழங்காது மீளாத்துயில் கொள்வார்
என்னே கொடுமையிது எப்போதுதான் முடிந்திடுமோ
பொன்னேர் புது நாட்டில் புலிக்கொடி நாம் ஏற்றிடவே.

(R/1690)
உற்றார், உறவினர், நண்பர்கள்.

நினைவு



முன்னணிப் படையின் மூச்சாகப் போனான்
புறநானூற்று வீரத்தின் புதியதொரு பதிப்பாகப்
— போனான்

உடல் மீளவில்லைத் தான்
மௌவி என்னவானான்
உருவற்ற தியாகத்தின் ஒளிச்சுடரில்
ஒரு பொறியானான்
புலரும் ஒளிப் பொழுதின் துளியாக
அவன் வாழ்க!

கோணவளை லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

பெற்றோர், சகோதரர்,
உறவினர், நண்பர்கள்

(B/3020)



மேஜர் லவன்
(துரைசிங்கம் ராஜ்சங்கர்)
கொழும்பு

வீரஜனனம்
21.04-1968

வீரமரணம்
14-07-1991

கட்டைக்காட்டில்
நெஞ்சினில் வீர நெருப்பினை ஏந்தி
நின்றவன் 'லவன்' எனும் வீரன்
அஞ்சிடல் அற்று ஆயிரம் களத்தில்
ஆடினோன் "லவன்" எனும் வேங்கை
நஞ்சினை கட்டி எதிரியை களத்தில்
நடுங்கிடச் செய்ததும் இவனே
மிஞ்சிய வனின் பணியினை நாங்கள்
முடித்திடச் சபதமொன் றெடுப்போம்.

- நண்பர்கள்

[B/3024]

## 31ஆம் நினைவு அஞ்சலி

தாயின் மடியில்
02 – 10 - 1968

தாயகமண்ணில்
30 - 07 - 1991



லெப். அல்பிரட்
(மயூரன்)
யோசெப் கெனடி சின்னத்துரை

தாய்மடியில் பிறந்தனன் - தன்
தாய் மண்ணிற்காய் வீறு கொண்டெழுந்தனன்
செனடியென்று பெயர் பெற்றனன்
கொடியோரை யொழிக்க பாசறை பூண்டனன்

காவலனாய் தீவகந்தனைக் காத்திட
கார்த்திகேசென்ப் பெயர் பெற்றனன்
அன்னை மண்ணின் அடிமை விலங்கை அழித்திட
அதிரடிப் படையாகி அல்பிரட்டென பெயர்
பெற்றனன்

மக்களையழித்திட வந்தவர்களை மண்டியிட
வைத்தனன்
மறவன் மயூரன் மாவீரனாயினன் - அவன்
மடியவில்லை மலையாகி விட்டான்

முத்தமிழ்தனைக் காத்திட முப்பெயர் கொண்ட
முத்தமிழனின் முப்பத்தொராம் நினைவு நாளிது

சரம்பொன் கிழக்கு,
ஊர்காவற்றுறை.

இவர் பிரிவால் துயருறும்
பெற்றோர், சகோதரர்,
உறவினர், நண்பர்கள்.

(B-3018)

## 31ஆம் நாள் வீர அஞ்சலி



வீரவேங்கை
நரேஸ்
(சபாரட்ணம்
சிவபாதம்)

கரவை மண்ணில்
கலை வளர்க்க
25 - 08 - 1975

கட்டைக்காட்டில்
சயவரை அழிக்க
30 - 07 - 1991

"கட்டைக்காட்டில் நரேஸ் நீ
விட்டுக்கொடுக்காமல் போர் புரிந்தாய்!
எட்டுத் திக்கும் பறந்த உன் குண்டுகள்
பட்டுச் சிதறின பகைவரின் தலைகள்
கட்டியணைத்தொரு முத்தம்தர நாமிருக்க
தட்டிக்கழித்து விட்டு தமிழ்மண்ணில்
[சாய்ந்தாயோ!"

நெல்லியடி,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

பெற்றோர், சகோதரர்,
உறவினர்,
தோழர்கள்.

(R/1688)

மின்னாது முழங்காது மீளாத்துயில் கொள்வார்
என்னே கொடுமையிது எப்போதுதான் முடிந்திடுமோ
பொன்னேர் புது நாட்டில் புலிக்கொடி நாம் ஏற்றிடவே.

(R/1690)

உற்றார், உறவினர், நண்பர்கள்.

## நினைவு கூருகின்றோம்...

1991 - 08 - 29

**லிங்கம்**



1988 ஆம் ஆண்டு இதேதினத்தில் கல்வியங்காட்டில் இந்தியப் படையினருடனான மோதலின் போது காயமுற்ற நிலையில் சயனைற் உட்கொண்டு வீரமரணமெய்திய
**லெப். கெனடி** (வாமதேவன் சிவநாதன் - 17/2, அருளம்பலம் ஒழுங்கை, அரியாலை)

1989 ஆம் ஆண்டு பொலிகண்டி ஏழுபுளியடி வீதியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரமரணமெய்திய
**லிங்கம்** (பாலசுப்பிரமணியம் சுந்தரலிங்கம் - செட்டித்தெரு, பிரதான வீதி, பருத்தித்துறை)

நாவாந்துறையில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட கொட்டடி, கண்ணபுரத்தைச் சேர்ந்த தமிழ் இளைஞன்

1990 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரமரணமெய்திய
**லெப். பாரூக்** (வெள்ளையன் ஏகாம்பரம் - கோரக்கல்மடு, கிரான்)
**கப்டன் பாரூக்** (நாச்சிமுத்து நந்தகுமார் - 7 ஆம் கட்டை, அளம்பில்)

மட்டக்களப்பு / ஏறாவூர், 5 ஆம் குறிச்சிப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்

வந்தாறு மூலையில் சிறிலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டு, சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

ஆழியவளை, தரவைப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட உலங்கு வானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

(B/3019) **- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

### சிந்தனைக்கு

எதைச் செய்தாலும் எச்சரிக்கையாக,
முடிவை எண்ணிப் பார்த்துச் செய்.

— லத்தீன் பழமொழி


ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம், 29-08-1991
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 5208
த. பெ. எண் 05


# சீனாவிற்கு அடுத்து இந்தியாதான்

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இந்தியா இராஜதந்திர முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகத் தெரியவருகின்றது. விடுதலைப்புலிகளின் முக்கிய பிரமுகர்களில் ஒருவரான சதாசிவம் கிருஷ்ணகுமாரை (கிட்டு) பிரிட்டனை விட்டு வெளியேறுமாறு பிரிட்டிஷ் அரசாங்கம் கோரியதும் இந்தியாவின் அழுத்தத்தைத் தொடர்ந்துதான் எனவும் தெரிய வருகின்றது.

ராஜீவ் காந்தியின் கொலையை காரணம் காட்டியே இந்தியா இந்த இராஜதந்திர முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது. ஆனால் உண்மையில் இந்தியாவின் உள்நோக்கம் அதுவல்ல. தென்னாசியாவில் முனைப்பான போராட்டமாகவும் முன்னுதாரணமான போராட்டமாகவும், இந்திய ஆதிக்கத்திற்குச் சவால் விடும் போராட்டமாகவும், தமிழீழ விடுதலைப் போராட்டம் அமைந்துள்ளமையே காரணமாகும். அத்துடன் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வெற்றி இந்தியாவின் ஒருமைப்பாட்டைச் சிதைத்து விடும் என்ற அச்சமும் ஆகும்.

ஆனால், இந்த இராஜதந்திர முயற்சிகள் குறுகிய காலத்திற்கு ஒரு சில மகிழ்ச்சி நிகழ்வுகளை இந்தியாவிற்கு ஏற்படுத்தினும், அம்மகிழ்ச்சி நீண்டநாட்கள் நிலைத்து நிற்கக் கூடியவையாக இருக்க மாட்டாது. ஏனெனில் இந்தியாவின் இந்த இராஜதந்திர முயற்சிகள் மேற்குலகம் புரிந்து கொள்ளாதவொன்றல்ல. ஆனால், இன்று இந்தியாவின் ஒத்துழைப்பு மேற்குலகத்திற்குச் சிறிய தேவையாக இருக்கின்றது. இதனால் அவை இந்தியாவின் சில அழுத்தங்களை ஏற்றுக்கொள்ளலாம்.

ஜனநாயகச் சித்திரங்கள், தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை என்பனவற்றை வைத்தே உலகின் முதலாந்தர வல்லரசில் ஒன்றாக இருந்த சோவியத் யூனியனை சிதறடித்தவை இந்த மேற்குலக நாடுகள். சீன அதிபர் குறிப்பிட்டிருப்பது போல் ஜனநாயகம், மனித உரிமைகள் என்ற போர்வையில் சில பெரிய நாடுகள் - அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகம் - தமது சித்தாந்தங்களை திணித்துள்ளன.

# தமிழீழ தேசியப்படையின் வளர்ச்சியும் மாறிவரும் யுத்த தந்திரோபாயங்களும்

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் நேரடி வாரிசான TNA என அழைக்கப்படும் தமிழ்த் தேசிய இராணுவமானது கர்ப்பத்திலேயே நோயுற்ற ஒரு குழந்தைதான், கொப்புள் கொடி அறுந்த கணத்திலேயே அது இறந்து போயிற்று. ஆனால், இந்தியப்படை வெளியேறிய போது புலிகளின் படையணிகள் இந்தியப்படை வருமுன்பிருந்த புலிகளின் கெரில்லாப் படை அணிகளோடு ஒப்பிடுகையில், அளவிலும் பலத்திலும் முன்னெப்பொழுதும் ஏற்பட்டிராத வளர்ச்சியை எட்டியிருந்தன என்றே கொள்ள வேண்டும். எனவே, ஒரு தேசியப் படையைக் கட்டியெழுப்புவதான தமிழர்களின் கனவு வேகமாகக் கனிந்தது எனலாம்.

இவ்வாறு தமிழர் தரப்பில் நிகழ்ந்த துரிதமான படைப் பெருக்கம் 1990 ஜூலையில் யுத்தமாக வெடித்ததிலிருந்து இன்றுவரை, ஒரு மரபு இராணுவமாக உருமாற முயலும் தமிழீழ தேசியப் படையானது இலங்கை அரசிற்கு, அதன் இராணுவத்திற்குள்ள வரையறைகளைக் கசப்பான விதத்தில் உணர்த்தியுள்ளது.

கொக்காவில், கோட்டை, மாங்குளம் முகாம்கள் வரிசையாக வீழ்ச்சியுற்றன. இராணுவம் தனது நிலைகளிலிருந்து முன்னேறிய போதெல்லாம் அடர்ந்த காடுகளிலோ, அல்லது கட்டடங்கள் செறிந்த நகர்ப்புறங்களிலோ அகலக் கால் வைத்து நகர முடியவில்லை. தமிழீழத் தேசியப் படை படிப்படியாக ஒரு மரபு இராணுவத்தின் குணங்களைப் பெற்று வருவதை இலங்கை அரசு அச்சத்தோடு கவனித்து வருகிறது. இம்முறை, தமிழீழத்தின் வடபாகத்தில் புலிகளைத் தேடித் தாக்கும் போர் முறைக்குப் பதிலாக, தன்னைக் காத்துக் கொள்ளும் தற்காப்புப் போர் ஒன்றிலேயே இராணுவம் ஈடுபடுகிறது.

2. மேற்படி இராணுவக் கிராமம் தனது ஒரு பகுதி எல்லையாகக் கடலைக் கொண்டிருப்பது, அல்லது நிச்சயமான கடல்வழி விநியோகத்தைப் பேணுவது.

3 இராணுவம் தனது நிலைகளிலிருந்து முன்னோக்கி எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிக்கும் முப்படைகளினதும் பலப்பிரயோகம் அத்தியாவசியமாயிருப்பது.

இந்த வகையில் இன்று தமிழீழத்தின் வடபாகத்தில் இலங்கை இராணுவம் தனது முகாம்களின் எல்லைகளை அகட்டி, பல கிராமங்களை உள்ளடக்கிய பெரிய நிலப் பரப்பில் பரவலாகச் சிதறி நிலைகொண்டுள்ளது. அத்துடன் மேற்படி இராணுவக் கிராமங்களின் ஒரு பகுதி எல்லையாகக் கடல் அமைந்துள்ளது. எனவே, ஒரு இராணுவக் கிராமத்தைப் பராமரிப்பது என்பது வான்படை கடற்படை தரைப் படை இணைந்த கூட்டுப் போர் நடவடிக்கை மூலமே சாத்தியப்படுகிறது,

மேலும் இங்கு துருப்புக்களை முன்னோக்கி நகர்த்துவதெனில் தரைப்படை, கடற்படைப் பீரங்கிகள் பின்னணியில் தொடர்ச்சியாக இயங்க வேண்டும். விமானப் படை இடையறாது வேவு பார்ப்பதோடு துருப்புக்களின் முன்னாலுள்ள பாதையைத் "துப்பரவாக்கவும்" வேண்டும். ஆனால் இந்த உத்தி கூட, அடர்ந்த காட்டிலோ, நகர்ப் புறங்களிலோ பூரணமாக வெற்றி தருவதாய் இல்லை. எனவே இன்று இலங்கை இராணுவத்திற்கு திறந்தவெளிதான் பாதுகாப்பான நகர்வுப் பாதையாக உள்ளது. மறைப்புக்களற்ற திறந்த வெளியை விமானப் படை தொடர்ச்சியாகத் தன் பார்வைக்குள் வைத்திருப்பது சுலபம். மேலும் மிக நீண்ட தூரம் சுடக்கூடிய துப்பாக்கிகளைப் பிரயோகிப்பதற்கு

வதானால், இலங்கைத் துருப்புக்களை திறந்த வெளிச்சண்டியர்கள்' எனலாம். ஆனால் இந்தத் 'திறந்த வெளிச்சாகசங்கள் கூட ஆனையிறவில் சோதனைக்குள்ளாயின.

ஆனையிறவுப் போர் கேந்திர முக்கியத்துவம் உடையது. குடா நாட்டைப் பிற பாகங்களுடன் இணைக்கும் ஒரே தரைப்பாதையான கண்டி வீதியை மறித்துக் கொண்டு முகாம் அமைந்துள்ளது. புலிகளின் இலக்கு கண்டி வீதியை விடுவிப்பது ஆகும். 1990 யூலைக்குப் பின் முகாம் பல மைல்கள் பரப்பிற்கு விஸ்தரிக்கப்பட்டு ஒரு ராணுவக் கிராமமாக மாற்றப்பட்டது. வடக்கில் கடல்வழி விநியோகத்தைப் பெறாதிருந்த ஒரே முகாம் ஆனையிறவு முகாம் தான். முகாமைச் சுற்றிலுமுள்ள திறந்த வெளியை ராணுவம் தனக்குப் பாதுகாப்புக் கவசமாகக் கருதியிருந்திருக்கக் கூடும். ஆனால் முற்றுகையின் உக்கிரம் தாங்க முடியாத கட்டத்தில் கடல் வழி உதவி கோரப்பட்டது. முற்றுகையை உடைக்கக் கடலில் திறக்கப்பட்ட விநியோக வழியை முகாமுடன் தொடுப்பதற்கு இலங்கை ராணுவம் மூன்று கிழமைகளிற்கு மேல் கரணம் தப்பினால் மரணம் என்ற நிலையில் போராடியது.

வடக்கில் ஒரு இராணுவக் கிராமத்தைப் பாதுகாப்பதில் கடல் வழி விநியோகத்தின் முக்கியத்துவம் நிரூபிக்கப்பட்ட போராகவும் ஆனையிறவுப்போர் அமைந்துள்ளது.

இந்தப் போர் புலிகளைப் பொறுத்தவரை பாதுகாப்பற்ற வெளியிலேயே நிகழ்ந்தது. முப்படைகளினதும் பிரமாண்டத்தை எதிர்த்துநின்று பெரும் எண்ணிக்கையில் போராளிகளை இழப்பதற்குத் தமிழர் தரப்பு தயாராகி விட்டமை போரில் நிரூபிக்கப்பட்டுள்ளது. இது புலிகள் வடக்கில் ஒரு மரபுப் போரிற்குத் தயாராகி வருவதை இலங்கை அரசிற்குத் திட்டவட்டமாக உணர்த்திய போர் என்றும் சொல்லலாம்.

இன்னுமொரு அம்சம் ஆனையிறவுப் போரில் தெளிவாகியுள்ளது. அதாவது தமிழீழத்தின் பிறபாகங்களில் நிலைகொண்டுள்ள புலிகளின் படையணிகளை அந்தந்த நிலைகளிலேயே தொடர்ந்து பேணியபடி, அதேசமயம் எதிரியின் பலம் பொருந்திய இலக்கொன்றை மிகக் கடுமையாக முற்றுகையிடும் வலிமை புலிகளிற்கு உண்டென்பதாகும். இம்முறை போரில், ஆனையிறவில் இருந்து புலிகளின் கவனத்தைச் சிதறடிக்கும் நோக்கத்துடன் மன்னாரிலும், முல்லைத்தீவிலும், மணலாற்றிலும் முன்னேற முயன்ற இலங்கை ராணுவம் கடும் எதிர்ப்பைச் சந்தித்தது.

எனவே தமிழர் தரப்பில் ஒரு மரபுப் படையை நோக்கிய வளர்ச்சியானது இலங்கை அரசிற்கு ஒரு உண்மையை உறுதிப்படுத்திவிட்டது. அதாவது, தமிழர் போராட்டத்தை இலங்கை அரசு தான் நினைத்தபடி கையாள முடியாது என்பதே அது.

— நாகார்ஜுனா

# உபதபால் அதிபர்களுக்கு 300 ரூபா விசேடபடி

(கொழும்பு)

இலங்கையின் தொலைத் தொடர்பு சேவைகளை எதிர் வரும் முதலாம் திகதி ரெலிகொம் கூட்டுத் தாபனம்

அதிகாரி இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் தபால் சேவையை சீராக்கவும் இது போன்ற திட்டம் வகுக்கப்பட்டிருப்பதாக

ஆனால், இந்த இராஜதந்திர முயற்சிகள் குறுகிய காலத்திற்கு ஒரு சில மகிழ்ச்சி நிகழ்வுகளை இந்தியாவிற்கு ஏற்படுத்தினும், அம்மகிழ்ச்சி நீண்டநாட்கள் நிலைத்து நிற்கக் கூடியவையாக இருக்க மாட்டாது. ஏனெனில் இந்தியாவின் இந்த இராஜதந்திர முயற்சிகள் மேற்குலகம் புரிந்து கொள்ளாததொன்றல்ல. ஆனால், இன்று இந்தியாவின் ஒத்துழைப்பு மேற்குலகத்திற்குச் சிறிய தேவையாக இருக்கின்றது. இதனால் அவை இந்தியாவின் சில அழுத்தங்களை ஏற்றுக்கொள்ளலாம்.

ஜனநாயகச் சீர்திருத்தங்கள், தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை என்பனவற்றை வைத்தே உலகின் முதலாந்தர வல்லரசில் ஒன்றாக இருந்த சோவியத் யூனியனை சிதறடித்தவை இந்த மேற்குலக நாடுகள். சீன அதிபர் குறிப்பிட்டிருப்பது போல் ஜனநாயகம், மனித உரிமைகள் என்ற போர்வையில் சில பெரிய நாடுகள் - அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகம் - தமது சித்தாந்தங்களை திணித்துள்ளன.

சீனாவின் இக்கூற்று சோவியத் குடியரசில் மேற்குலகம் மேற்கொண்ட திணிப்புகளை மட்டும் குறிப்பிடுவதாக இல்லை. எதிர்காலத்தில் சம்மீது - சீனாமீது - திணிக்கப் போகும் சித்தாந்தத் திணிப்பிற்கான முன்னெச்சரிக்கையாகவும் உள்ளது என்றும் கொள்ளலாம்.

இந்தியாவும் இதனை அசட்டை செய்ய முடியாது சோவியத்யூனியன் சிதறுண்டதுடன் அடுத்த மேற்கத்தைய இலக்கு சீனாதான். அதில் சந்தேகப்பட எதுவுமில்லை. இதற்கு சோவியத்திடம் இருந்து கம்யூனிச சித்தாந்தத் தலைமை சீனாவிற்குக் கைமாறியதும், அதன் அணுவாயுத பலமும் காரணமாகும் இந்நிலையிலேதான் இந்தியாவின் சில அணுசரணைகள் மேற்குலகத்திற்குத் தேவையாகின்றது. அதுவரை இந்தியாவின் தேவைகள் சிலவற்றை மேற்குலகு நிறைவு செய்யலாம் அதனை இந்தியா தனது இந்திய இராஜதந்திரத்திற்குக் கிடைத்த வெற்றி எனவும் களிப்புறலாம்.

ஆனால், சீனாவிற்கு அடுத்து இந்தியாதான் மேற்குலகின் இலக்காக இருக்கும் என்பதற்குப் பெரிய ஆய்வு ஒன்றும் தேவையில்லை. இந்தியா இன்று 'ஜனநாயக நாடு' என்ற ரீதியில் தேசிய இனங்களின் போராட்டங்களை நசுக்குவதை மேற்குலகம் நேரடியாகக் கண்டு கொள்ளாதது போல் இருக்கலாம். ஆனால் எதிர்காலத்திலும் இவ்வாறே அவர்கள் நடந்து கொள்வார்கள் என இந்தியா எதிர்பார்க்குமானால் அது மடைமையானதாகும்.

அத்தோடு இந்தியாவில், கூர்மையடைந்துள்ள போராட்டங்களும், இந்திய ஆயுதப்படையினரின் மனித மீறல் சம்பவங்களும், இந்தியாவின் பொருளாதார நெருக்கடிகளும் இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கு எதிரான ஆயுதங்களாக மேற்குலகத்தினால் பாவிக்கப்படுவதற்கு இலகுவான அம்சங்களாகும்.

இந்நிலையை இந்தியா தற்பொழுதே புரிந்து கொள்ளத் தவறுமாயின். எதிர்காலத்தில் அதற்காகக் கொடுக்கப் போகும் விலை உயர்வானதாக இருக்கும். ஆகையால், தென்னாசியத் தேசிய இனங்களின் போராட்டங்கள் இந்திய ஒருமைப்பாட்டிற்கு அச்சுறுத்தலானவை என்ற கொள்கையை இந்தியா மாற்றி அவற்றின் சுயநிர்ணய உரிமைக்கு வழிவகைகளை ஆரம்பிக்குமானால் எதிர்கால இந்தியாவிற்கும், தென்னாசியாவிற்கும் அது நன்மை பயக்கும்

---

வம் தனது நிலைகளிலிருந்து முன்னேறிய போதெல்லாம் அடர்ந்த காடுகளிலோ, அல்லது கட்டடங்கள் செறிந்த நகர்ப்புறங்களிலோ அகலக் கால் வைத்து நகர முடியவில்லை. தமிழீழத் தேசியப் படை படிப்படியாக ஒரு மரபு இராணுவத்தின் குணங்களைப் பெற்று வருவதை இலங்கை அரசு அச்சத்தோடு கவனித்து வருகிறது. இம்முறை, தமிழீழத்தின் வட பாகத்தில் புலிகளைத் தேடித் தாக்கும் போர் முறைக்குப் பதிலாக, தன்னைக் காத்துக் கொள்ளும் தற்காப்புப் போர் ஒன்றிலேயே இராணுவம் ஈடுபடுகிறது.

வடக்கில் இலங்கை இராணுவத்தின் தற்காப்புப் போர் உத்திகளை குறைந்த பட்சம் பின்வருமாறு வகைப்படுத்தலாம்

1. இங்கு இராணுவ முகாம்களைப் பராமரிப்பதை விட, இராணுவக் கிராமங்களைப் பராமரிப்பதே பாதுகாப்புடையது.

இடையறாது வேவு பார்ப்பதோடு, துருப்புக்களின் முன்னாலுள்ள பாதையைத் "துப்பரவாக்கவும்" வேண்டும். ஆனால் இந்த உத்தி கூட, அடர்ந்த காட்டிலோ, நகர்ப் புறங்களிலோ பூரணமாக வெற்றி தருவதாய் இல்லை. எனவே இன்று இலங்கை இராணுவத்திற்கு திறந்தவெளிதான் பாதுகாப்பான நகர்வுப் பாதையாக உள்ளது. மறைப்புக்களற்ற திறந்த வெளியை விமானப் படை தொடர்ச்சியாகத் தன் பார்வைக்குள் வைத்திருப்பது சுலபம் மேலும் மிக நீண்ட தூரம் சுடக்கூடிய துப்பாக்கிகளைப் பிரயோகிப்பதற்கு திறந்த வெளி வசதியானது (இது புலிகளிற்கும் பொருந்தும் எனவே பெருமளவு விமானப் படையின் வேவுத் திறனிலும், தாக்கும் திறனிலும் தங்கியுள்ள இலங்கை ராணுவம வெட்ட வெளியிலேயே தனது கெட்டித்தனங்களைக் காட்ட முயன்று வந்துள்ளது. இன்னொரு விதமாகச் சொல்

ன்ற நிலையில் போராடியது.

வடக்கில் ஒரு இராணுவக் கிராமத்தைப் பாதுகாப்பதில் கடல் வழி விநியோகத்தின் முக்கியத்துவம் நிரூபிக்கப்பட்ட போராகவும் ஆனையிறவுப்போர் அமைந்துள்ளது.

இந்தப் போர் புலிகளைப் பொறுத்தவரை பாதுகாப்

கிய வளர்ச்சியானது இலங்கை அரசிற்கு ஒரு உண்மையை உறுதிப்படுத்திவிட்டது. அதாவது, தமிழர் போராட்டத்தை இலங்கை அரசு தான் நினைத்தபடி கையாள முடியாது என்பதே அது.

— நாகார்ஜுனா

---

# யாழ். மாவட்டத்திற்கான புதிய விவசாய திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திற்குரிய 1991/92ஆம் ஆண்டுக்கான புதிய விவசாயத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

யாழ் செயலகத்தில் நேற்று நடைபெற்ற மாவட்ட விவசாய அபிவிருத்தி பற்றிய கூட்டத்தில் மேற்படி திட்டம் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.

இம்மாவட்டத்தில் செய்கை பண்ணப்பட வேண்டிய பயிர் வகைகள் மற்றும் ஏனைய விவசாய நடவடிக்கைகளுக்கு வேண்டிய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான வழி வகைகளும் இத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

(க)

# உவர் நிலங்களை பயன்படுத்த முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் உள்ள உவர் நிலங்களை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இம் மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளில் காணப்படும் உவர் நிலங்களை அபிவிருத்தி செய்து விவசாய முயற்சிகளுக்குப் பயன்படுத்துவதற்காகவே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது

இவ்வாறான உவர், சவுர் நிலங்கள் தொடர்பான தரவுகளையும் அவற்றை அபிவிருத்தி செய்வதற்கான வழிவகைகள் அடங்கிய திட்ட அறிக்கைஒன்றையும்தயாரித்து தம்மிடம் சமர்ப்பிக்கும்படி யாழ். அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகர் விவசாய சேவைகள் பணிப்பாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(க)

# உபதபால் அதிபர்களுக்கு 300 ரூபா விசேடபடி

(கொழும்பு)

இலங்கையின் தொலைத் தொடர்பு சேவைகளை எதிர்வரும் முதலாம் திகதி ரெலிகொம் கூட்டுத்தாபனம் பொறுப்பேற்கவுள்ளது.

கொழும்பு கிராமோதய சபை மண்டபத்தில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சர் ஏ.எம்.எஸ். அதிகாரி இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் தபால் சேவையை சீராக்கவும் இது போன்ற திட்டம் வகுக்கப்பட்டிருப்பதாக குறிப்பிட்டார். அத்துடன் சகல உபதபால் அதிபர்களுக்கும் இவ்வாண்டு டிசம்பர் மாதத்திற்கு முன்பாக முந்நூறு ரூபா விசேடபடி வழங்கப்படவுள்ளது என்றும் கூறினார்.

# சொத்துக்கள் பறிமுதல் வங்கிகளுக்கு முடக்கம்

(மொஸ்கோ)

கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய நிர்வாகக்குழுவிற்கு சொந்தமான எல்லா சொத்துக்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும், இதன் வங்கிக் கணக்குகள் முடக்கி வைக்கப்பட்டுள்ளதாகவும் சோவியத் தொலைக்காட்சி அறிவித்துள்ளது.

அத்துடன் பொழுதுபோக்கு மையங்களையும், கட்சியின் விடுமுறை இல்லங்களையும் ஒப்படைத்து விடுமாறும் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

# உணவு கொள்வனவிற்கு அமெ. அவசரக் கடன்

(வாஷிங்டன்)

சோவியத் யூனியனுக்கு கால்நடை உணவுப் பொருட்களையும், தானியங்களையும் கொள்வனவு செய்வதற்கு கடன் உத்தரவாதத்தை உடனடியாக வழங்க இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதிஜோர்ஜ் புஷ் அறிவித்துள்ளார்.

கடந்த திங்கட் இழமை வாஷிங்டனில் செய்தியாளர்கள் மாநாட்டில் புஷ் இதனைத் தெரிவித்தார்.

இதன்படி 131 கோடி 50 இட்சம் டொலர்களுக்கான கடன் உத்தரவாதத்தை அமெரிக்கா வழங்கும் என்றும் புஷ் தெரிவித்தார்.

---

# தவறு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கில் நிதிப் பொறுப்பாளர் செ.தமிழேந்தி சிற்றூர் அவை உறுப்பினர் மத்தியில் 25-8-91 இல் பேசியதாக 28 ஆம் திகதிபிரசுரமாகிய செய்தி முற்றிலும் தவறானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

(ஆ-ர்)

# அணுஆயுத மேற்பார்வையிட சர்வதேசக்குழு நியமிக்கவும்

- கொர்பசேவின் ஆலோசகர்

(மொஸ்கோ)

சோவியத் யூனியனில் அரசியல் கொந்தளிப்பு நிலை இருந்து வரும் வேளையில் அங்குள்ள அணு ஆயுதங்களை மேற்பார்வை செய்யும் படியும், அதில் முக்கிய பங்கை வகிப்பதற்கெனவும் சர்வதேச நாடுகளின் குழுவொன்று நியமிக்கப்படல் வேண்டுமென்று சோவியத் யூனியன் அதிபர் கொர்பசேவின் முக்கிய ஆலோசகர் ஒருவர் ஆலோசனை கூறியுள்ளார்.

,,வாஷிங்டன் போஸ்ட்'' பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியொன்றில் அவர் சர்வதேச நாடுகள் நியமிக்கும் குழுவொன்றினால் விசேட ஆய்வு மேற் கொள்ளப்படுமென்றும், இதனைச் சோவியத் யூனியன் அங்கீகரிக்க வேண்டுமென்றும் கோரியுள்ளார்.

இதனிடையே செப்ரெம்பர் நடுப்பகுதியில் ஹேயிக் நகரில் கூடவிருக்கும் ஐரோப்பிய பொருளாதார நாடுகள் சோவியத்தில் எழுந்துள்ள நிலைமைபற்றி ஆராயவுள்ளன.

இதேவேளை ஜப்பானிய பிரதமர் டோசிகி கைபூ சோவியத் அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளைச் சீராக்கும்காலம் வந்துவிட்டது எனக் குறிப்பிட்டுள்ளார்.

## ஆபிரிக்க நாடுகளின் கடனை ரத்துச் செய்யவும்

(ஜெனிவா)

ஆபிரிக்க நாடுகள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கியிருப்பதால் அவற்றிற்கு செல்வந்த நாடுகள் முன்னர் வழங்கிய கடன் நிலுவைகளை ரத்துச் செய்துவிட வேண்டும் என்று ஐ. நா. செயலாளர் காவியர் பெரஸ் டி கொயிலர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும் அவர் ஆபிரிக்க நாடுகளில் சீர் குலைந்துள்ள பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு, ஐ. நா. சபையிலுள்ள அங்கத்துவ நாடுகள் உறுதியளிக்க வேண்டுமெனவும் கோரியுள்ளார். ஐ. நா. செயலாளர் 27,000 கோடி டாலர் கடன் பளுவோடு ஆபிரிக்க நாடுகள் ஒருபோதும் முன்னேற்றம் காணமுடியாது. சர்வதேச நாடுகளின் உதவி அந்நாடுகளுக்கு போதியளவு கிடைக்கவில்லையெனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.


**நிதர்சனம் நிறுவனத்தில் பின்வரும் வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

1. தகவல் சேகரிப்பாளர்கள்
2. தகவல் அலுவலர்கள்
3. செய்தியாளர்கள்
4. நிகழ்ச்சி மதிப்பீட்டாளர்கள்
5. அறிவிப்பாளர்கள்
6. விளம்பரம் சேகரிப்பாளர்கள்

அனுபவம் திறமை என்பவற்றிற்கேற்ப தகுந்த வேதனம் வழங்கப்படும்.

சுய விபரங்களுடன் 1991 - 09 - 05 இற்கு முன் தொடர்பு கொள்க.

'நிதர்சனம்'
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.


## மிகப் பெரிய நீர்ப்பாசனத்திட்டம்

(திரிப்பொலி)

உலகின் மிகப் பெரிய நீர்ப்பாசனத்திட்டங்கள் லிபியாவில் அங்குரார்பணம் செய்யப்படவுள்ளது. மனிதனால் ஆக்கப்பட்ட இந்த மாபெரும் ஆற்றுத் திட்டத்தின் கீழ் லிபியா ஊடாக, 1250 மைல்தொலைவிற்கு குழாய் மூலம் நீர் எடுத்துச் செல்லப்படுகிறது. இந்தத் திட்டத்தை லிபியத்தலைவர் கேணல் மும்மூர் கடாபி அங்குரார்பணம் செய்யவுள்ளார்.

## மதிய உணவு முத்திரைகளை பெறவும்

பங்குனி மாதத்துக்குரிய மதிய உணவு முத்திரைகளை பெற்றுக் கொள்ள விரும்பும் கட்டைக்காடு றோ. க. வித்தியாலய மாணவர்கள் கொடிகாமம், கச்சாய் பேதுருவானவர் ஆலயத்தில் வந்து தம்மிடம் பெற்றுக் கொள்ளலாம் என . அந்த பாடசாலையின் அதிபர் கூறியுள்ளார்.

பிரயாணம் செய்ய முடியாதவர்கள் மாணவர்களின் பெயரையும், வகுப்பையும் குறித்து அனுப்பினால் அனுப்பிய பிரதிநிதியிடம் உணவு முத்திரையை கொடுக்க தயாராக உள்ளதாகவும் அவர் கூறினார்.

## ஒன்று கூடல்

விடுதலைப்புலிகள்மாணவர் இயக்க ஆசிரிய, மாணவ, கிராமிய, கொத்தணித் தொடர்பாளர்கள், மாணவர் இயக்க உறுப்பினர்களுக்கான மாதாந்த ஒன்று கூடல் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் (30 8.91) நாளை காலை 10 மணிக்கு நடைபெறும். சகலரையும் தவறாது சமுகம் தருமாறு யாழ். மாவட்ட விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் கோரியுள்ளது.

## 44,000 பரீட்சார்த்திகளின் முடிவுகள் படுமோசம்

1990 ஆம் ஆண்டு டிசம்பரில் இடம் பெற்ற கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சையில் தோற்றிய 3,61,000 பரீட்சார்த்திகளில் 44,000 பேர் ஒன்று அல்லது பூச்சியம் பெற்றிருந்தனர் என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இத்திணைக்கள ஆணையாளர் ஆதர் வெதமுல்ல விடுத்துள்ள அறிக்கையொன்றில் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தது. 28,900 பேர் எட்டுப் பாடங்களில் சித்தி பெறவில்லை என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

## மட்டு. கல்வித் திணைக்களம் ஒப்பந்த ஆங்கில ஆசிரியரை நியமிக்க நடவடிக்கை

மட்டக்களப்புக் கல்வித் திணைக்களம் ஒப்பந்த அடிப்படைகளில் ஆங்கில ஆசிரியர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்கள், ஏனைய அரசாங்க ஊழியர்கள் மற்றும் ஆங்கிலம் கற்பிக்கத் தகுதியுள்ளோர் இதற்கு விண்ணப்பிக்கமுடியும் என்றும் கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

கே. ஜி. பி.

மைப் பீடத்தைக் கலைப்பதற்கான உத்தரவை கொர்பசேவ் நேற்றுப் பிறப்பித்தார்.

இதேவேளை பல நூற்றுக்கணக்கான கே. ஜி. பி. படையினரை பாதுகாப்பு அமைச்சுக்கு மாற்றம் செய்யும் பணிப்புரையைத் தொடர்ந்து, அவர்கள் மேற்படி அமைச்சுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

குடியரசுகளை

பட்டு விட்டன என்று கூறினார்.

பால்டிக் குடியரசுகளுக்கு

[illegible]

## குவைத்திலிருந்து சிறிலங்கா திரும்பியவர்களுக்கு விசேட வகுப்புகள்

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உள்ள நகரங்களைத் தவிர்ந்த ஏனைய நகரங்களில் குவைத்திலிருந்து திரும்பியோருக்கான விசேட ஆலோசனை வகுப்புகளும் தொழிற்பயிற்சியும் வழங்கப்படவுள்ளது.

கண்டி, மாத்தறை, குருநாகல், அனுராதபுரம், புத்தளம், மாத்தளை, காலி, களுத்துறை, கம்பஹா ஆகிய நகரங்களில் வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புப் பணியகம் இந்த வசதிகளைச் செய்து கொடுத்துள்ளது. இதேவேளை கேகாலை அம்பாந்தோட்டை ஆகிய பகுதிகளில் ஏற்கனவே தொழிற் பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

## துர்க்கை அம்மன் நிர்வாகசபை வெள்ளி விழா

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை சிறிதுர்க்கா தேவி தேவஸ்தான நிர்வாக சபையின் வெள்ளி விழாவை ஒட்டி நாளைவெள்ளிக்கிழமை, சனிக்கிழமை ஆகிய இருதினங்களிலும் நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

அத்துடன் இருபத்தைந்து ஆண்டு சேவையை மேற்கொண்டோருக்கு கௌரவம் அளிக்கும் நிகழ்ச்சியும், வெள்ளி விழா மலர் வெளியீடும் இடம் பெறவுள்ளது.

## நீலன் கொழும்பில் தேடப்படுகிறார்

(கொழும்பு)

சாம் தம்பி முத்துவையும் அவரது பாரியாரையும் 1990 ஆம் ஆண்டு மே மாதம் 7 ஆம் திகதி கொலை செய்தது தொடர்பாக நீலன் என்று அழைக்கப்படும் சின்னத்தம்பி சோமநாதன் என்ற ஆரையம்பதி மட்டக்களப்பைச் சேர்ந்த இளைஞனைப் பொலிசார் தேடிவருகின்றார்கள்.

24 வயதுடைய இவரை கைது செய்வதற்குப் பொலிசார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்

## 3 கோடி உதவி

(வாஷிங்டன்)

கட்டுப்பாடற்ற சந்தைப் பொருளாதார முறை ஒன்றிற்கு சோவியத் யூனியன் மாறுவதற்கு துணைபுரியும் வகையில் உலக வங்கி அதற்கு ரூபா 3 கோடி உதவித் திட்டம் ஒன்றை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது.

நன்கொடைவழங்கும் மற்ற நாடுகளிடமிருந்து நிதி உதவிகளை ஏற்பதற்கான ஏற்பாடுகளுக்கும் உலக வங்கி ஒழுங்கு செய்திருக்கிறது.

புலிகள்

ஆதரவாளர்கள் என கர்நாடக மாநில பொலிஸ்துறை அறிவித்துள்ளது.

1. தகவல் சேகரிப்பாளர்கள்
2. தகவல் அலுவலர்கள்
3. செய்தியாளர்கள்
4. நிகழ்ச்சி மதிப்பீட்டாளர்கள்
5. அறிவிப்பாளர்கள்
6. விளம்பரம் சேகரிப்பாளர்கள்

அனுபவம் திறமை என்பவற்றிற்கேற்ப தகுந்த வேதனம் வழங்கப்படும்.

சுய விபரங்களுடன் 1991 - 09 - 05 இற்கு முன் தொடர்பு கொள்க.

'நிதர்சனம்'
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

குறிப்பு : மேலதிக விபரங்களை நிதர்சனம் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். (B/3025)

## யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

கல்வியாண்டு 1991 / 1992

[பல்கலைக்கழக வசதிகள் அனைத்தும் கொண்ட அங்கீகாரம் பெற்ற ஒரே நிறுவனம்]

### கலைமுதற் தேர்வு - G. A. Q.
### வணிகமுதற் தேர்வு - 1st in Com.

**ஆகிய தேர்வுகளுக்கான பதிவுகள் 01 - 09 - 1991 முதல் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்கள் சித்தியடைந்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்,**

*Registrar,*

**College of Higher Study,**

***Anaipanthi.***

மு. குறிப்பு:

1. பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் படிப்புக்கான விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. பட்டப்படிப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த யாழ். விரிவுரையாளர்களும், யாழ். விக்னா கல்வி நிலைய விரிவுரையாளர்களும் ஒருங்கிணைந்த சேவை.

(B/3004)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

பங்குனி மாதத்துக்குரிய மதிய உணவு முத்திரைகளை பெற்றுக் கொள்ள விரும்பும் கட்டைக்காடு றோ. க. வித்தியாலய மாணவர்கள் கொடிகாமம், கச்சாய் பேதுருவானவர் ஆலயத்தில் வந்து தம்மிடம் பெற்றுக் கொள்ளலாம் என அந்த பாடசாலையின் அதிபர் கூறியுள்ளார்.

பிரயாணம் செய்ய முடியாதவர்கள் மாணவர்களின் பெயரையும், வகுப்பையும் குறித்து அனுப்பினால் அனுப்பிய பிரதிநிதியிடம் உணவு முத்திரையை கொடுக்க தயாராக உள்ளதாகவும் அவர் கூறினார்.

### லங்கா

கடமையாற்றும் ஊழியர்களுக்கு மாதாந்த ஊதியம் வழங்கமுடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது இந்நிலைமையைத் தவிர்ப்பதற்காகவே இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

மேலும் இந்நிறுவனத்தில் இருந்து எந்த ஊழியரும் வேலையில் இருந்து நீக்கப்படவில்லை என்றும் யாழ். செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இந் நிறுவனத்தின் தலைவர் தெரிவித்தார். (க)

### சிற்பம்

வடஇலங்கை நுண்கலை மன்றம் அறிவித்துள்ளது.

இதன்பொருட்டு ஆர்வமுடையோர் கல்வித் திணைக்களத்தில் இயங்கும் நுண்கலை மன்றப் பகுதியுடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (மு)

### இல. தமிழர்

ஞர் ஒருவரை தமிழ்நாடு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த 24ஆம் திகதி இவர் கைது செய்யப்பட்டார் என்றும், இவர் இலங்கைத்தமிழர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

### திருமலையில்

திருமலை)

★ வீரவேங்கை சிறிமனோ (கணபதிப்பிள்ளை ராஜன், திருஞானசம்பந்தர் வீதி, திருமலை)

ஆகியோர் வீரமரணமடைந்தனர். இவ்வீரவேங்கைகளுக்கு விடுதலைப் புலிகள் தமதுவீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

மைப் பீடத்தைக் கலைப்பதற்கான உத்தரவை கொர்பசேவ் நேற்றுப் பிறப்பித்தார்.

இதேவேளை பல நூற்றுக் கணக்கான கே. ஜி. பி. படையினரை பாதுகாப்பு அமைச்சுக்கு மாற்றம் செய்யும் பணிப்புரையைத் தொடர்ந்து, அவர்கள் மேற்படி அமைச்சுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

### குடியரசுகளை

பட்டு விட்டன என்று கூறினார்.

பால்டிக் குடியரசுகளுக்கு அங்கீகாரம் வழங்கி வரும் நாடுகளின் நீண்டு வரும் பட்டியலில் இப்போது சுவிற்சலாந்தும், நியூசிலாந்தும் சேர்ந்து கொண்டிருக்கிறது,

இந்த பிரச்சினை தொடர்பான அமெரிக்க முடிவு இந்த வார இறுதிக்குள் எதிர்பார்க்கப்படுவதாக வாஷிங்டனில் இருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### கடந்தகால

கால வினாப்பத்திரங்களடங்கிய புத்தகங்கள் சிங்கள மொழியில் மட்டுமே விற்பனை செய்யப்படுகின்றன. இதனால் அங்கு பயிலும் தமிழ் மாணவர்கள் பெரிதும் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர். (ச)

### சீமெந்துக்

ஊழியர்களுக்கு ஊதியத்தை வழங்க முன்வருமா என்பது கேள்விக்குறியாகவேயுள்ளது.

மேற்படி கூட்டுத்தாபனத்தின் காங்கேசன்துறை ஆலையைக் கம்பனியாக மாற்றும்போது வெளிநாட்டு நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படலாமென்றும் தெரிவிக்கப்படுகின்றது. இதேபோல நாட்டின் ஏனைய பகுதிகளில் இயங்கி வரும் சீமெந்து ஆலைகளையும் இவ்வாறு தனியார் கம்பனிகளிடம் ஒப்படைப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது

கூட்டுத்தாபனங்கள் அனைத்தையும் கம்பனிகளாக மாற்றும் அரசின்திட்டத்தின்படியே மேற்படி நடவடிக்கையும் இருப்பதாகவும், ஏற்கனவே நாட்டில் உள்ள பல கூட்டுத்தாபனங்கள் இவ்வாறு கம்பனிகளாக மாற்றப்பட்டிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## கொழும்பில் தேடப்படுகிறார்

(கொழும்பு)

சாம்தம்பி முத்துவையும் அவரது பாரியாரையும் 1990 ஆம் ஆண்டு மே மாதம் 7 ஆம் திகதி கொலை செய்தது தொடர்பாக நீலன் என்று அழைக்கப்படும் சின்னத்தம்பி சோமநாதன் என்ற ஆரையம்பதிமட்டக்களப்பைச் சேர்ந்த இளைஞனைப் பொலிசார் தேடிவருகின்றார்கள்.

24 வயதுடைய இவரை கைது செய்வதற்குப் பொலிசார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்

### 6 பெண்கள்

அங்கு வந்த இராணுவத்தினர் விசாரணைக்கென ஆறு பெண்களை அழைத்துச் சென்று மானபங்கப்படுத்தியுள்ளனர். (தி)

(வாஷிங்டன்)

கட்டுப்பாடற்ற சந்தைப் பொருளாதார முறை ஒன்றிற்கு சோவியத் யூனியன் மாறுவதற்கு துணைபுரியும் வகையில் உலக வங்கி அதற்கு ரூபா 3 கோடி உதவித் திட்டம் ஒன்றை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது.

நன்கொடைவழங்கும் மற்ற நாடுகளிடமிருந்து நிதி உதவிகளை ஏற்பதற்கான ஏற்பாடுகளுக்கும் உலக வங்கி ஒழுங்கு செய்திருக்கிறது.

### புலிகள்

ஆதரவாளர்கள் என கர்நாடக மாநில பொலிஸ்துறை அறிவித்துள்ளது.

கர்நாடகத்தில் உள்ள அனைத்து இலங்கைத் தமிழர்களும் தமது பெயர்களை பதிவு செய்து கொள்ளவேண்டும் என்று கர்நாடக அரசு கேட்டுக் கொண்டது தெரிந்ததே.

## மரண அறிவித்தல்

### திருமதி திருமேனி வள்ளிப்பிள்ளை

கட்டுவன் மயிலிட்டி தெற்கைச் சேர்ந்த திருமேனி வள்ளிப்பிள்ளை (27-8-91) செவ்வாய்க்கிழமை அதிகாலை 2-00 மணியளவில் காலமானார். இவர் காலம் சென்ற திருமேனியின் அன்பு மனைவியும், இராசலட்சுமி, இராசமணி, மகாதேவன் (இ. போ. ச. கோண்டாவில்), மகாலிங்கம் (ஓய்வு பெற்ற இராணுவ் அதிகாரி) ஆகியோரின் அன்புத்தாயாரும், V. விசுவலிங்கம் (ஓய்வு. பெற்ற ஆசிரியர்), S. நவரத்தினம் (ஆசிரியர் வசாவிளான் குட்டியபுலம் மகாவித்தியாலயம்). நேசமணி, தனலட்சுமி ஆகியோரின் அன்புமாமியும், சிவயோகன் (பிரான்ஸ்), சிவாகணநாதன் (பிரான்ஸ்), சிவகௌரி, சிவாயினி, மாலினி, ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரிகைகள் நேற்று 3 மணியளவில் கோண்டாவிலிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கே. கே. எஸ். வீதி
கோண்டாவில்

தகவல்
வ. விசுவலிங்கம்

(R/1692)